**11.09.2025**

**<u>மனு எண்.13/2025 ல் அ.வ.எண். 113/2011 அனுமதிக்கப்பட்டு வா.சா.1 சந்திரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** தாவாசொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பார்த்தேன். அதன் பின்பு பார்க்கவில்லை. மேற்சொன்ன வில்லங்கத்தை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்சொன்ன வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தாவாசொத்தின் சர்வே எண்.**291** ஆகும். மொத்தம் விஸ்தீரணம் **2** ஏக்கர் **21** செண்ட் ஆகும். அதில் **1** ஏக்கர் **61** செண்டை **1**ம் பிரதிவாதிக்கு விற்றது போக மீதம் **60** செண்டை நான் கைவசம் வைத்திருந்தேன். மேற்சொன்ன **60** செண்ட் நிலத்திற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**2.** வா.சா.ஆ.**1** ஆவணம் **2007**ம் வருடம் **1**ம் பிரதிவாதிக்கு நான் கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை படிக்க தெரியுமா என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லை அதனால் படிக்க முடியாது. வா.சா.ஆ.**1** ல் சொத்து விவரத்தில் **60** செண்ட் விற்பனை செய்தது போக மீதம் உள்ள **1** ஏக்கர் **61** செண்டு என்று காட்டப்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்த பத்திரத்தில் அப்படி தான் உள்ளது என்றால் சரியல்ல. **2** ஏக்கர் **60** செண்டு முழுவதும் விற்பனை செய்துவிட்டேன் அதனால் இந்த வழக்கை

நிலைக்கதக்கதல்ல அதனால் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்தால் ஏற்கனவே 2007ம் வருடம் முன்பு விற்பனை செய்த சொத்தை பற்றி தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. தாவாசொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது அப்பா பெயரில் இருந்தது தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா பெயரில் உள்ள பட்டாவை நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. பட்டா என் அப்பா பெயரில் இருந்திருந்தால் நான் தாக்கல் செய்திருப்பேன் அவ்வாறு இல்லாததால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தின் சர்வே எண்.291 உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. எனது அப்பா எழுதிய உயிலின் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா சொத்து என்பதால் நான் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் 25.11.1983 தேதியில் எனது அப்பா எனக்கு உயில் எழுதி கொடுத்ததாக கூறியுள்ளேன் அதை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாததால் நான் தாக்கல் செய்யவில்லை. தாவாசொத்தில் நான் உரிமை கோரி பரிகாரம்

கேட்டுள்ளேன் அதற்கு ஆதரவாக நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு விற்ற 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை மற்ற பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி விற்ற 1 ஏக்கர் 61 செண்ட நிலத்தில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

**5**. எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள அசல் வழக்கு எண்.**324/2010** யார் யார் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அனுபவித்து வருவதாக கூறும் வழக்கு சொத்திற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அனுபவிக்காததால்தான் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த **20.03.2007** கிரைய ஆவணத்தில் எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த உயிலை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

**6**. வா.சா.ஆ.**1** ஆவணத்தில் ஐக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் நான் அந்த ஆவணத்தை தயார் செய்யவில்லை. செல்லமுத்து கவுண்டர் என்பவரிடம் நான் கிரையம் ஒப்பந்தம் போட்டேன் என்று கூறியுள்ளேன் அதை ஏன் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. **14.01.2007** தேதியிட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததிருந்தால் அது கிரைய ஒப்பந்தமா அல்லது கிரைய ஆவணமா என்று தெரிந்திருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணம் கிரைய

ஆவணம் தான் அந்த உண்மையை மறைப்பதற்காகதான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தில் கூறியுள்ள நான்கு மால்கள் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தின் நான்கு மால்கள் என்றால் சரியல்ல.

7. 60 செண்ட் நிலத்தில் என்ன இருக்கிறது என்றால் அதில் இரண்டு வீடு உள்ளது. தாவாசொத்திற்குரிய 60 செண்ட நிலத்திற்கு என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவாசொத்து என்னுடைய சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை. இரண்டு வீடு கட்டிய பிறகுதான் நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல அதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் அதற்குபின்பு தான் வீடு கட்டினார்கள். வழக்கு சொத்தில் 2011ம் வருடத்தில் என்ன இருந்தது என்றால் காலியாகதான் இருந்ததது.

8. வா.சா.ஆ.23 முதல் 25 வரையிலான ஆவணம் நீதிமன்ற ஆணையர் வரைபடம், அறிக்கை மற்றும் சர்வெயர் அறிக்கை அனைத்தும் அசல் வழக்கு எண்.36/2013 வழக்கில் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26 மற்றும் 27 அசல்வழக்கு எண்.36/2013 ல் வழங்கபட்ட தீரப்பு மற்றும் தீரப்புரை என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு நிரந்தர உறுத்து கட்டளை கேட்டு 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு எனக்கு எதிராக

தள்ளுபடி செய்யபட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே மேற்சொன்ன வழக்கில் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் மற்றும் அறிக்கை இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகளை எந்த விதத்திலும் கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கும் இவ்வழக்கு சொத்திற்கு தான் தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான்.

**9**. இரண்டு வழக்கிலும் எனது வழக்கின்படி **1**ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த **1** ஏக்கர் **61** செண்டு போக மீதம் உள்ள **60** செண்டிற்குதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு வழக்கிலும் நான் வெவ்வேறு நான்கு எல்லைகளை விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.**36/2013**ல் நீதிமன்ற ஆணையர் அவ்வழக்கின் நான்கு மால் விவரங்களின்படிதான் அவ்வழக்கு சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனவே அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையை வைத்து இவ்வழக்கில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

**10**. **60** செண்ட் நிலத்தின் நான்கு எல்லைகள் விவரம் தெரியுமா என்றால் கிழக்கே குளத்திற்கு செல்லும் பாதை, மேற்கே கோவிந்தசாமி கவுண்டர் நிலம், வடக்கே செல்லமுத்து கவுண்டர் நிலம், தெற்கே **1**ம் பிரதிவாதி நிலம். மேற்சொன்ன நான்கு எல்லைகள் அசல் வழக்கு எண்.**36/2013**ல் குறிப்பிட்டுள்ள நான்கு மால்கள் இவ்வழக்கின் நான்கு மால் கிடையாது என்றால் சரியல்ல. **1**ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த

கிரைய ஆவணத்தில் நான்கு எல்லைகளை குறிபிடாமல் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நான்கு எல்லைகளை குறிப்பிட்டு 1ம் பிரதிவாதிக்கு உரிமையான சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. அசல் வழக்கு எண்.24/1998 ல் தனபாக்கியம் பெயரில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது சகோதரி தனபாக்கியம் என்றால் இல்லை அம்சம் தான் எனது சகோதரி. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பே செல்லமுத்து என்பவருக்கு நான் 60 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தைதான் 10 பிரதிவாதிக்கு பொது அதிகாரம் கொடுத்தது மற்ற பிரதிவாதிக்களுக்கு கிரையம் செய்துள்ளார். எனவே அதை பொறுத்து எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

12. மேற்சொன்ன 60 செண்டில் உள்ள இரண்டு வீடுகளுக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் வாங்கியுள்ளார்கள். மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் ஏழுமலை மற்றும் கன்னியப்பன் பெயரில் உள்ளது. மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனது வழக்குரையிலும் பிரமாணவாக்குமூலத்தலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 10ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற 1 ஏக்கர் 61 செண்ட நிலத்தை பொறுத்துதான் அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவாசொத்து எனக்கு உரிமையான சொத்து என்று காண்பிப்பதற்கு நான்

எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனது அனுபவத்தை காட்டுவதற்கும் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனவே வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல. எனவே நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.